**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

## உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை / Easter Sunday Service

**5th ஏப்ரல் / April 2026**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. பிரேம்குமார்**<br>Mr.PremKumar |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. பிரேம்குமார்**<br>Mr.PremKumar |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

***அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!***

*1. அல்லேலூயா! அல்லேலூயா!*
*அல்லேலூயா!*
*இப்போது போர் முடிந்ததே;*
*சிறந்த வெற்றி ஆயிற்றே*
*கெம்பீர ஸ்துதி செய்வோமே.*
*அல்லேலூயா!*

*2. கொடூர சாவை மேற்கொண்டார்;*
*பாதாள சேனையை வென்றார்;*
*நம் ஸ்தோத்திரப் பாட்டைப்*
*பெறுவார்.*
*அல்லலூயா!*

*3. இந்நாள் எழுந்த வேந்தரே,*
*என்றைக்கும் அரசாள்வீரே;*
*களித்து ஆர்ப்பரிப்போமே!*
*அல்லலூயா!*

*4. எல்லாரும் உம்மைப்*
*போற்ற நீர்*
*மரித்துயிர்த்திருக்கிறீர்;*
*சாகாத ஜீவன் அருள்வீர்!*
*அல்லேலூயா!*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல்**<br>Responsive Reading | **சபையார் இணைந்து**<br>Congregation |

**வழி நடத்துபவர்:** நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள்.

**சபையார்: ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.**

**வழி நடத்துபவர்:** ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல,

**சபையார்: துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**

**வழி நடத்துபவர்:** மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டு கொள்ளுவதில்லை.

**சபையார்: அவர் மரித்து, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார். அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.**

**வழி நடத்துபவர்:** அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.

**சபையார்: கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.**

**வழி நடத்துபவர்:** மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

**சபையார்: ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ஆமென்.**

| | |
|---|---|
| ✝ **பொதுவான பாவ அறிக்கை**<br>Prayer of Confession | **சபையார் இணைந்து**<br>Congregation |

**சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம். எங்களுக்குச் சுகமே இல்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல்**

**பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.**

✝ **அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம்** — **சபையார் இணைந்து**
The Apostles' Creed — Congregation

**வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர், இயேசு கிறுஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே, கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுப்பட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் மரித்தோர் இடத்திலிருந்து எழுந்தருளினார்.**
**பரலோகத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாய் இருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்..**

**சிறுவர் / வாலிபருக்கான ஜெபம்**
Prayer for Children & Youth

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

**<u>வானகம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய்</u>**

*1. வானகம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய்*
*வாழ்க உம் திருநாமம்*
*வருக உம் அரசு பெருக உம் விருப்பம்*
*வாழ்க உம் திருநாமம்*

*2. வானகம் போல வையகம் தனிலும்*
*வாழ்க உம் திருநாமம்*
*தினமெங்கும் உணவை தயவுடன் தாரும்*
*வாழ்க உம் திருநாமம்*

*3. பாவங்கள் யாவும் பொறுத்தெம்மை ஆளும்*
*வாழ்க உம் திருநாமம்*
*பிறர் பிழை நாங்கள் பொறுப்பது போல*
*வாழ்க உம் திருநாமம்*

*4. சோதனை நின்றெமை விலக்கியே காரும்*
*வாழ்க உம் திருநாமம்*
*தீவினையிருந்தே மீட்டிட வாரும்*
*வாழ்க உம் திருநாமம்*

*5. ஆட்சியும் ஆற்றலும் அனைத்துள்ள மாண்பும்*
*வாழ்க உம் திருநாமம்*
*இன்றுபோல் என்றும் இறைவனே உமதே*
*வாழ்க உம் திருநாமம்*

*6. ஆமென் ஆமென் அனாதியாய் ஆமென்*
*வாழ்க உம் திருநாமம்*
*ஆமென் ஆமென் அனாதியாய் ஆமென்*
*வாழ்க உம் திருநாமம்*

**சிறப்புப் பாடல்** — **பாடகர் குழு**
Special Song — Choir

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**<u>எழுந்தார் இறைவன்</u>**

**எழுந்தார் இறைவன், - ஜெயமே ஜெயமெனவே எழுந்தார் இறைவன்**

*1, விழுந்தவரைக் கரையேற்றப், - பாவத் தழுந்து மனுக்குலத்தை மாற்ற, விண்ணுக் கெழுந்து நாம் அவரையே போற்ற,*

*2. செத்தவர் மீண்டும் பிழைக்க, - உயர் நித்திய ஜீவனை அளிக்கத், - தேவ பக்தர் யாவரும் களிக்க,*

*3. கருதிய காரியம் வாய்க்கத் - தேவ சுருதி மொழிகளெல்லாம் காக்க, - நம் இரு திறத்தாரையும் சேர்க்க,*

*4. சாவின் பயங்கரத்தை ஒழிக்கக், -கெட்ட ஆவியின் வல்லமையை அழிக்க, - இப் பூவின் மீதுசபை செழிக்க,*

*5. ஏதுந் தீவினை செய்யாத் தூயன், - எப் போதுமே நன்மைபுரி நேயன், - தப்*

பாது காத்திடும் நல்லாயன்,

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மிஸ். கிறிஸ்டின் அம்மானி**
***சங்கீதம் 118 : 14 – 26***
Scripture Reading — Miss. Christine Ammani
Psalm 118 : 14 – 26

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory / Preparatory Song — Congregation

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்**

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்,**
**உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்.**

*1. வேதாளக் கணங்கள் ஓடிடவே,*
*ஓடிடவே உருகி வாடிடவே*
*2. வானத்தின் சேனைகள் துதித்திடவே,*
*துதித்திடவே பரனைத் துதித்திடவே*

*3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன,*
*தெறிபட்டன நொடியில் முறிபட்டன*

*4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே,*
*எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே*

*5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்,*
*அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்*

*6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,*
*மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை*

*7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்,*
*பாதம் பணிவோம், பதத்தைச் சிரமணிவோம்*

✝ **திருவிருந்து ஆராதனை முறைமை**
Order of Holy Communion

***போதகர்*** *: உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.*

***சபையார்:* எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.**

***போதகர் :*** *நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடவோம்.*

***சபையார்:* அப்படிச் செய்வதுதகுதியும் நீதியுமாயிருக்கிறது.**

***போதகர்:*** *கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது. ஆதலால் தூதரோடும், பரம சபையனைத்தோடும் நாங்கள் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி.*

***எல்லாரும் :*** *சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர்,பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடமால் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்,* **ஆமென்.**

***போதகர் :*** *சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமபிதாவே, தேவரீர் எங்கள்மேல் உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரே தரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும், போந்ததுமான பலியைச் செலுத்தினதுமல்லாமல், தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே.*

இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் வாங்கும்போது, அவர் மூலமாய் தெய்வசுபாவத்துக்கு நாங்கள்

*பங்குள்ளவர்களாகும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.*

*அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார், அப்படியே, இராப்போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; இதைப் பானம்பண்ணும் பொழுதெல்லாம், என்னை நினைவுக்கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார்.* ***ஆமென்.***

***<u>எல்லாரும் :</u> இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் இந்த உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின்கீழ் விழும் துணிக்கைகளையாகிலும் பொறுக்கிக் கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல. ஆகிலும் தேவரீர், எப்பொழுதும் இரக்கஞ்செய்யத் தவறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆன தன்மையினால் காருண்ணிய கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பரிபூரண ஜீவியத்தால் நாங்கள் நிரப்பப்படவும், அவருடைய சாயலில் நாங்கள் வளரவும், அவரிடத்தில் நாங்களும் எங்களிடத்தில் அவரும் எப்பொழுதும் வாசமாயிருப்பதற்கும், ஏற்ற விதமாய் இந்தப் பரிசுத்த நற்கருணையில் பங்குபெற எங்களுக்கு கிருபை செய்தருளும். ஆமென்.***

***லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,***

***லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,***

***லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்***

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** <u>Memory Verses</u> — ***சபையார் இணைந்து*** Congregation

***சங்கீதம் 118 : 23 - 24***
Psalm 118 : 23 - 24

***23. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.***
***24. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

***சுபஜெய மங்களமே - நித்திய சுபஜெய மங்களமே,***
***சுகமே தரவே புவிமீ துயிர்த்தசுதனேசு நாதருக்கே***

*ஆனந்தம் பாடிடவும், பரன்*
*அன்பைக் கொண்டாடிடவும்,*
*அசையா நிலையோ டெழுந்து தொழவே*
*அருள் கூர்ந்திடு பவர்க்கே*

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**